உதவிபெறும் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டவிதி 15(4), ஆசிரியர்களின் பதவி உயர்வை (Promotion) வரையறை செய்துள்ளது. இந்த விதி சிறுபான்மைப் பள்ளிகளுக்கு பொருந்தாது என்று சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தெளிவுபடுத்தி உள்ளது. ஆகவே, உதவிபெறும் பள்ளிகளுக்குரிய சட்ட விதி 15(4)-ன்படி மேற்படி ஆசிரியரின் கோரிக்கையை பரிசீலிக்க இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த ஆசிரியர் மேற்படி பணியிடத்திற்கு அதாவது, பதவி உயர்வுக்கு முழுமையான தகுதியை உடையவர் அல்ல. இளங்கலைப் பட்டப் படிப்பை (ஆங்கிலம்) இரட்டைப்பட்டம் படிப்பு (Double Degree) முறையில் பயின்றவர் ஆவார். நீதிமன்ற தீர்ப்பின்படி (Double Degree) படித்தவர்களை பதவி உயர்வுக்கு பரிசீலிக்க இயலாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேரடி நியமனத்தின் மூலம் 05-02-2014 முதல் நியமனமாகி உள்ள செல்வி. மைக்கிள் ஜோஸ்பின் என்பார் மேற்படி பணியிடத்திற்குரிய முழுமையான கல்வித்தகுதிகளை பெற்றுள்ளார். இந்நிலையில், அவரது நியமனத்தின் மீது மேற்படி ஆசிரியர் ஆட்சேபனை தெரிவிப்பதை விதிகளின்படி ஏற்க இயலாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொருள் சார்ந்து கூடுதல் விவரங்கள் தேவை என்றால் அவற்றை அளித்திட நிர்வாகம் தயாராக உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

+ Yvon Ambroise

(+ ஆயர் இவோன் அம்புரோஸ்)
கத்தோலிக்கப்பள்ளிகளின் மேலாளர்
தூத்துக்குடி மறைமாவட்டம்.

நகல்:

1. மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள், சேரன்மகாதேவி (இருப்பு) திருநெல்வேலி-627001
2. முதன்மைக்கல்விச் செயலர் அவர்கள், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச்செயலகம், சென்னை - 600009.
3. முதல்வர் அவர்களின் தனிப்பிரிவு, தலைமைச் செயலகம், சென்னை - 600009.
4. தாளாளர், ஹோலி ரெடீமர் மேல்நிலைப்பள்ளி, திசையன்விளை.